


ஓலை 115| ஓசை 238| மார்ச் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை





## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை

## பொருள்

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**

**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## சூதும் வாதும் வேதனை செய்யும்!

## இன்னிசை வெண்பா




கடற்செல்வ நீரைக் களவாடும் மேகம்,
கடலுக்கே கொட்டிக் கொடுப்பதுபோல், சூதா(ல்)
அடங்காத வேட்கையால் ஆடுவோர் செல்வம்
தடம்மாறிப் போகுமே தான்.

மலையருவி தன்னையே மாந்திடவே ஆறும்
நிலைமாறி சூதுவாது நெஞ்சமுடன் கொள்ளை
நிலையா(ய்) அடித்தும் நிலையற்றே ஏரி
அலையடிக்கப் போய்ச்சேரும் ஆம்.

கோடையுமே சூதுவாதால் குன்றளவு நீள்மரத்தி(ன்)
ஆடை பரித்தா(ல்) அழிந்தேதான் போயிடுமோ?
கோடையும் போனபின்னே கொத்தாகப் பூத்திடுமே;
ஓடையாய்ச் சூதுவோட ஓட்டு.

ஆயிர மாண்டாய் அருகிடா வண்ணமாய்ப்
பாயிரம் போலவா பாரினில் வாழுவாய்?
நாயினைப் போலவே நாக்கினைத் தொங்கவிட்டே
காயினில் சூதுவாது(ம்) ஏன்?




எத்தனை கோடியாக ஏற்றப் பெருஞ்செல்வம்
இத்தரையில் சூதுவாதா(ல்) ஈன்றெடுத்தே என்னபயன்?
அத்தனையும் இன்புற்றே ஐயமின்றி வாழ்வாயா?
நித்தமும் சூதின்றி நில்.

காலமெல்லாம் பாடுபட்டே கண்மணியாய்க் காத்துவாழ,
ஞாலத்தில் வஞ்சகத்தின் நச்சுவிளை யாட்டினையும்
ஓலமிட்டே நாட்டில்தா(ன்) ஓடிடவே நல்லொழுக்கம்
ஞாலத்தில் நட்டுவைக்க நாடு.

**இலக்கணக் குறிப்பு:**

நான்கடிகள், இரண்டடிக்கோர் எதுகை; அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை; முதல் மூன்றடிகள் நான்கு நான்கு சீர்கள் பெற்று, நான்காமடியில் மூன்று சீர் பெற்று, மூன்றாம் சீர் நாள், மலர், காசு, முடியும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் " பிறப்பு என்ற வாய்பாட்டில் கலந்து வரும் குற்றியலுகரம் நோக்க வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

## காய் + காய் + மா +தேமா

உருமாறும் நீராவி உயர்ந்தால் மேகம்.
உருவத்தில் காராகி உகுக்க எண்ணும்.

உருமிடியும் மின்னலுமே உரசப் பெயல்
உருவெடுக்க நீர்த்திவலைச் சிந்தும் துளியாய்.

உருவெடுக்கும் சிப்பியிலே உருண்ட நீரும்
உருவமான வெண்முத்தாய் ஒளிர்ந்தே மின்னும்.

உருண்டோடும் பொய்ம்மையுமே உதற ஓடும்
உருமாறா உண்மைக்கும் உறக்க மின்றே!



கவிஞர் செ. கலைவாணி

# கனவொன்றில்

காக்கைகள் நிறம்மாறி
புறாவாகக் காணக்காண்கிறேன்.
ஆமைகளாய்ச் சிட்டுக்குருவிகள்.
ஊரின் வடக்குக்குளம்
மாறியிருக்கிறது சிறுதொட்டியாக.
வாலிபத்தை அணிந்துத்திரிகிறார்கள்
சாயங்களுடன் வயோதிகர்கள்.
தர்மம் செய்கிறார்கள் யாசிப்பவர்கள்.
வலம் வருகிறது
பகலில் சந்திரனும்
இரவில் சூரியனுமாக.
திசைகளை வேறு கோணங்களில்
காட்டுகிறது
திசைமானிகள்.
கருநிழலாய் விழுகிறது
நிலைக்கண்ணாடியில் பிம்பங்கள்.
எதிர்த்திசையில் உழல்கிறது
காலம் கடிகாரங்களில்.
பிரபஞ்சத்தில் பூத்தவையெல்லாம்
இருந்து கொண்டிருக்கிறது ஏதோ.
அதனதன் சுயத்தையிழந்து
முற்றிலும் மாறுபட்டு
வெவ்வேறு அரிதாரங்களுடன்
என் நீள் கனவொன்றில்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

5. பதுமையார் இலம்பகம்

மந்திரம் மூன்றையும் கற்ற சீவகன்
இந்திரன் போன்ற சுதஞ்சணனை வணங்கினான் .
"என் விருப்பப்படி செல்வேன்" என்றான் .
சுதஞ்சணனும் அவன் போக சம்மதித்தான்.

"பெருமை தங்கிய இல்லாள் தத்தை
திரும்பிச் சென்றதும் அவளைக் காண்பேன்
அருமை மனைவி அவளோடு கூடுவேன்
திரும்பிச் செல்ல திங்கள் ஆகுமே"

நினைப்பதுநடக்காது என்றது அசரீரி
"நினைத்துப் பார் உன் கடமையை
உன் அரசகுலத்தையே அழித்தவன்
உன் தாய் உனக்காக காத்திருக்கிறாள்"

"ஆறிரு திங்களில் இராசமாபுரம் அடைந்து
கூறு போட்டு கள்ளனை முடித்து
வீறுயர் முடியும் சூடி மன்னனாகி
பேறு போற்றும் கடமை மறவாதே"
(கள்ளன் : கட்டியங்காரன் )
வானூர்தியில் வந்து நிலமிசை இறங்கினான்
கானகத்தில் வேடன் சந்தித்தான்சீவகன்
"நீ எம்மலையில் வாழ்பவன்" வினவினான் .
"யான் மலைவாழ் வேடர்கள் தலைவன்"

"உயிரைக் கொன்று தின்பது பாவம்
அருகன் ஆகமம் கூறுவதும் இதுவே
விரும்பும் ஊன் சுவை நரகமே
உயிரை வருத்தி வாழ்வது நன்றோ?"

"கொல்லா விரதம் ஊனை நீக்கலும்
சொல்லாமல் நற்பயன் எவர்க்கும் நல்குமே"
"நல்ல வார்த்தைகள் இன்று கேட்டேன்
அல்லவை செய்யேன்" என்றான் வேடன்

அரக்கு மாளிகை பெருந்தீ சிக்கினர்
தருமன் முதலான பஞ்சவர் தப்பினர்
காட்டுத் தீயால் வளப்புற்று நின்றன
காட்டு யானைகள் துன்பம் நீக்கினான்



அரணபாதம் மலைக் கோயில் வணங்கினான்
விரும்பி பல்லவ நாட்டை அடைந்தான்
அருமை சந்திராபம் நகர் சென்றான்
அரசன் தனபதி சீவகனை வரவேற்றான்

அவன் மகன் உலோகபாலன் நண்பனானான்
சீவகன் யாழிசை நகரமே மயங்கியது
அவன் வீரத்தையும் அறிந்தான் நண்பன்
இவனே சிறந்த ஆண்மகன் உணர்ந்தான்.

தொடரும்...

கவிஞர் நா. திருக்குமரு

என் வீட்டிலிருந்து பணியிடம் நோக்கி
வெறும் பாதங்களால் கடந்தேன்
ஈறடி திருக்குறள் கூறும்
ஈராயிரம் ஆண்டு பழைய
பயன்மரம் என்ற பதத்தின் பொருளை
இருபது அடி எடுத்து வைப்பதற்குள்
உணர்த்திவிட்டது
இளவேனில் கால உச்சி வெயில்



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# என் காதலுக்கு இன்னும் பெயரிடவில்லை



பார்வையால் வசியமாக்கிட
பாவையிடம் வசமானேனே
காந்தமாய் ஈர்த்திடவே
காதலால் கட்டுண்டேனே

நினைவுகள் நிழலாட
கனவினில் கரைந்தேனே
உணர்வுகளில் உறவாடி
உள்ளத்தைக் கவர்ந்தாளே

உயிரினில் உறைந்திட
நித்தமும் இனிமையே
இதமானத் தழுவலில்
பூங்காற்றின் பூபாளமே

சொல்லியக் காதலா
சொல்லாதக் காதலா
கண்வழிக் காதலா
கண்டதும் காதலா

இதயத்தின் காதலா
இளமையின் காதலா
பருவத்தின் காதலா
பகட்டானக் காதலா

என் காதலுக்கு
இன்னும் பெயரிடவில்லை
என்னுள் நுழைந்தே
எனை ஆள்பவளே

மாயக்காரியே மயக்கிய
பேரழகி நீதானே
மதியும் மயங்குதடி
சிறகில்லாமல் பறக்குதடி

சிந்தையும் சிதறுதடி
சிந்தனையும் ஓடுதடி
இனியவளே
இளையவளே நான்

என் காதலுக்கு
இன்னும் பெயரிடவில்லை

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# நிலா சோறு

நீரற்றுப் போன ஓடையில்
நிலாவைக் காட்டி சோறு
ஊட்டினாள் ஆய்.
நிறைவிழந்த ஊருணி
நிழல்கள் நெருப்பாய் நிற்க.

குருதிக் கறை படிந்த ஆட்சி
கொற்றவன் கோணலாகி நிற்க.
மக்களின் கண்ணீர் குடிக்கும்
மதி இல்லா மன்றம்.

உடைபடும் உருவம் திணறும் திடல்
தீரா இருள் விலகி போரொளி தீண்ட
நிமிரும் மக்கள்.



கவிஞர் செ. தமிழ் நேயன், தமிழ் நாடு

# பெருமை

## அதிகாரம் : 98



### பெருமை

ஒளியென்பது ஊக்கமும்
இழிவென்பது ஊக்கமின்றியும்.
உயிர்வாழலாம் எனக்கருதும்
எண்ணமு மாகுமாம்.

பிறப்பு எவ்வுயிர்க்கும்
ஒத்த இயல்பாகையால்.
வேறான தொழில்களால்
சிறப்பியல்பு கணக்கிடப்படாதாம்.

அளப்பெருஞ் செயல்புரியாதோர்
உயர்நிலையிருந்தும் பெரியராகார்.
செயல்புரிவோர் தாழ்நிலையில்
வாழ்வோராயினும் சிறியோராகார்.

கற்புடைமகளிர் வழுவாது
தமைக்காத்து ஒழுகுதல்போல்.
தன்னைத்தான் காத்துநடப்போனிடம்
பெருமைப்பண்பு குறையாதாம்.

பெருங்குணமுடையோர் வறுமையிலும்
செயற்கரிய செயல்களை.
விடாது செய்துமுடிக்கும்
வலிமை கொண்டோராம்.

பெரியோர்போற்றி அவரியல்பை
பெற்றிடும் நோக்கமானது.
பெரியோர் சிறப்பறியா
சிறியோருள்ளத்தில் இல்லையாம்.

செல்வச்சிறப்பு தற்பொருந்தாத
சீரற்ற கீழோரிடத்துண்டானால்.
முறைகடந்த செயல்களையவர்
செய்வதற்கு அஞ்சாராம்.

பெருமையுடையோர் எக்காலமும்
செருக்கற்ற பணிவுடனிருப்பர்.
சிறுமையுடையோர் எக்காலமும்
தற்பெருமைப் பேசித்திரிவராம்.

பெருமைப்பண்பது செருக்கின்
காரணமிருந்தும் அமைந்திருத்தலும்.
சிறுமைப்பண்பது பெருமையற்ற
காரணத்தும் செருக்குறுவதுமாம்.

பெருமையுடையோர் பிறர்பெருமை
ஏற்றிப்பேசி குறைமறைப்பர்.
சிறுமையுடையோர் பிறரின்
நற்குணம்மறைத்து குற்றமுரைப்பராம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# அக நாயகனே

என் அகத்திற்குள் இருக்கும் உன்னை,
புறம் தள்ள மனமில்லை.

என்னை புறம் தள்ளிய உன்னை,
என் அகத்தில் இருந்து அகற்ற முடியவில்லை.



கவிஞர் ப. சுரேகா, திண்டுக்கல்

# பெருநாளும் யாசகனும்

எத்தனை வலிகள் எத்தனை வேதனைகள்
தலையில் சுமடும் தள்ளாடும் நிலையில்
கையில் குழந்தையும் கைத்தாங்கலாய் பிடித்து
ஊர் விட்டு ஊராய் சென்று
சதக்காகளை வாங்கி சங்கடத்தைப் போக்கி
கால்நடையாய் நடந்து கால்களும் தேய்ந்து
வாசல்படி தோறும் வந்து நின்று
வெயிலையும் தாங்கி வெந்துப் போயி
செல்வந்தன் வீட்டில் செலவுக்காக
கேட்டுகொடுப்பவனும் அகத்தோடு
கொடுத்து அனுப்பினாரே
இயற்கை உபாதைகளுக்கும்
இடமில்லாமல் போக
பிள்ளை குட்டிகளும் பிழை அறியாதே
வெகுளியாகவும் வெள்ளந்தியான குணமும் கொண்ட
பரிதவித்த மனமும் பாசத்தோடு அணைக்க
பெருநாள் இரவிலே பெற்றோருக்காக
சாரை சாரையாக வந்து சாலை வீதியும் நிறைந்தது
பித்ரா அரிசியை பிரியத்தோடு வாங்கி
அவரவர் ஊருக்கு அசராது குடும்பம்
குடும்பமாக பெட்டியோடு குழந்தைகளையும் அழைத்து
பேருந்தில் ஏறி பேரின்பமாக சொந்த பந்தங்களோடு
பகிர்ந்துண்டு மகிழ்ந்து பரவசம் அடைந்தாரே.



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# நட்பெனும் நந்தவனம்

பசுமை நினைவுகளில்
நட்பெனும் நந்தவனம்!
உறவுகளில் மணக்கும்
நிரந்தர பூவனம்!
//
எப்போது பழகினோம்
இன்றும் தெரியவில்லை!
நட்போடு உறவாடியதை
சொல்ல மொழியில்லை!
//
இருவரும் பள்ளியில்
படிப்பதாக நடித்தோம்!
நட்பெனும் வானில்
பறவைகளாக சிறகடித்தோம்!
//
மதிய உணவுகள்
காலை உணவானது!
பள்ளி நேரங்கள்
காற்றின் சருகுகளானது!
//
இரவு நேரங்கள்
விடியலைத் தேடின!
விடுமுறை பொழுதுகள்
உனக்காக ஏங்கின!
//
பாலின பாகுபாட்டால்
வகுப்புகள் பிரித்தன!
நமக்கான தூரங்கள்
தொடுவானாக நீண்டன!
பள்ளியும் இல்லமும்
தடுப்பானது நமக்கு!
சாதியும் மதமும்
புதைகுழியானது நட்புக்கு!
//
எதிர் பாலருக்கு
நட்பென்பது விதிவிலக்கா?
வாழ்வில் நிறைவேறாத
பகலின் கனவா?
//
இன்றும் தொலைதூர
தோழனாக நான்!
என்றும் தொடரும்
நம்பிக்கையாக நீ!
//
உன் புன்னகை
மட்டும் போதும்!
நமது தோழமை
தினமும் பூக்கும்!
//
பள்ளி நினைவுகளில்
என்றும் திளைத்திருப்போம்!
நட்பெனும் நந்தவனத்தில்
பூக்களாக பூத்திருப்போம்.



கவிஞர் அனல் நிலவன், கொசவபட்டி (திண்டுக்கல்)



வைப்பாறு படுகையிலே
ஊத்து தோண்டி

தோண்டி நீரெடுக்க
பொழுது சாயும்

அலுங்காமல் நலுங்காமல்
தேத்தாங் கொட்டையிட்டு,

தேத்தித் தெளிந்த
முந்தா நாள் நீரை,
இன்று;

இந்தா! இந்தா என்று
கொடுத்து மகிழும் தேவானைகளை
தேடுது என் மனம்.

தாகத்தில் தவித்த வாய்க்கு
ஒரு வாய் தண்ணீர் தர
நாதி இல்லை; மாநகரத்தில்

தண்ணீர் பாட்டிலை
துப்பட்டா போர்த்தி

மறைக்கும் தேவிகள்
மட்டும் இங்கே.

கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூரு


# கரமில்லா ஓவியன்

தூரிகை தொடவுமில்லை
துவைத்திட வண்ணமில்லை
பார்க்கின்ற திசைகலெல்லாம்
பலவண்ண ஓவியமாம்

அந்திவானம் தொடுகின்ற
அலைகடலை பார்க்கும்போதும்
மந்தையாக கால்நடைகள்
மலைமுகட்டில் மேயும்போதும்

மலைமகனின் கூந்தலாக
மலையருவி இறங்கும்போதும்
காற்றோடு கைகோர்த்து
காடுகளும் ஆடும்போதும்

பலவண்ண மலர்கலெல்லாம்
பார்த்தென்னை சிரிக்கும்போதும்
கரமில்லா ஓவியனோ
கற்பனைக்கு வருகின்றான்



இயற்கை என்பவனோ
இறைவன் அவன்தானோ
கற்பனை வார்த்தையின்
கருவறை ஆனவனோ

முத்துக்கள் சிதறலைப்போல்
முடிவில்லா பிரபஞ்சமும்
எத்திக்கும் பார்க்கினும்
எல்லையில்லா வான்வெளியும்

எண்ணத்தில் வரைந்ததனால்
ஏற்பட்ட படைப்பேயாகும்
ஆழ்மன கற்பனையால்
அனைத்தையும் படைத்துவிட்டான்

உன்மனம் நம்புவதே
உருவாகும் வாழ்க்கையாக
எண்ணங்கள் அழகானால்
எல்லோரும் ஓவியனே

கவிஞர் அ. தினசேகரன், அருளவாடி (விழுப்புரம் மாவட்டம்)

# கண்ணீரோடே!

கண்ணீர்துளியும் கசங்கலோடு
கடுந்துன்பத்திலுருக்கும்போதே
கதறிய வார்த்தைகளோடு

கடகடவென்றே கரைந்துவிழுதே
கடிவாளம்போடமுடியாதே துன்பத்திலுமே
கனிவான நேரத்திலே ஆனந்தமாக
கடும்வலியதிலே வழிதேடியே

கடும் சொல்லிலே சோதிப்பதாக
கனநேர மனவலியை
கரிக்கும் நீரதனால் கழுவிடலாமே

கரு பெயர்ந்து உயிராக ஜனித்திடும்போது
கத்திய கூவலோடு கடுஞ்சிறு உயிரும்
கவியழுகையோடே மகிழ்வித்திடுமே

கட்டினவனின் கடுமைக்கு கதையளப்பதாக
கடிகாரமுள்ளின் சுழற்சி வாழ்விலே
கவனிப்பாரற்ற உறவுகளின்
கழிக்கும் வார்த்தைக்கும் மௌனமாக

கசிகின்ற நீர்த்துளியே பிறர்அறியா
கவலையாக மறைத்திட்டு
கவனமுடன் கலகலப்பாக இருந்திட்டு
கருவிருளில் கம்மென்றே துளைத்திடுவோமே

கரந்திடும் மழைதுளியா கண்ணீரும்
கனத்திடும் இதயத்தின் உயிர்துளியது
கள்ளமில்லா மனதிலும் ஊறிடுமே
கபடத்தாலே களியாட்டம் ஆடிடுமே

கடைசி மூச்சு உயிர் உடலோடு
கடந்து சென்ற பின்னும்
கலந்திடும் கூட்டத்திலும்
கடலலையான கண்ணீரோடே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# மன்னிப்பு

மறைக்க நினைத்தேன்
மனதின் தவறுகளை
மௌனத்தில் புதைத்தேன்
நினைவின் சுவடுகளை

நிழல் போல அது
நெஞ்சில் தொடர்ந்தது
காற்று கிசுகிசுத்தது
கண்ணீர் வழிந்தது

உண்மை சொன்னவுடன்
உள்ளம் ஊமையாகிவிட்டது
மன்னிப்பின் ஒளியில்
மனம் மலர்ந்து விட்டது



கவிஞர் நுஸ்ரா முஹம்மது அலி ஜின்னா

# எழுதுகோல்

மை நிரப்பி கம்பீரமாய்
தலைநிமிர்ந்து நின்ற
எழுதுகோல்

இன்று அலைபேசியின்
அரசாட்சியில் தலைகுனிந்து
அடிமையாய்

வெள்ளை காகிதத்தில்
உற்சாகமாய் பாதயாத்திரை
நடத்திய எழுதுகோல்கள்



நவீன உலகின் நிர்வாண
நிலையில் தோல்வியின்
சோகங்களாய்

மனித கரங்களில் எழுதுகோல்
மாயமானதால் கைப்பேசியின்
கறைகள் அசிங்கமாய்

எழுத்துக்கள் இன்று ஏக்கங்களாய்
எழுதுகோலின் மரணத்தில்
கண்ணீர் அஞ்சலிகளாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# ஓசையின் ஒப்பனை

உள்ளங்கள் துள்ளும்
சந்தங்கள் சொல்லும்
வாழ்வில் சுழன்ற
வர்ணங்கள் எல்லாம்

வாசனை கொள்ளா
திரவியங்கள் சொல்லும்
இதழ்களின் இணைப்பு
இதயத்தை வெல்லும்

மருவிய காலங்கள்
மாற்றத்தில் சொல்லும்
என்றாவது காலத்தில்
ஒன்றாவது இல்லை

ஒளிமயம் வாழ்வில்
ஓசைகள் ஏராளம்
ஒத்த ஓசைக்கு
உன்னுருவம் வந்துப்போகும்

காலமே காலமே
கலங்காமல் காத்திரு
கோலமே கோலமே
புதுவிடியலில் பூத்திரு

மறுமலர்ச்சி மாறாத
மாதங்களின் நிறைந்திடு.



கவிஞர் ஏ. தேவராஜ், சென்னை

# உணர்வின் விசும்பல்

தூங்கிக்கொண்டிருப்போரை எழுப்பி
கேட்கப்படும் கேள்விக்கு
பதில் உளறலாகவே அன்றி
வேறேதாகவும் இருக்காது
பதில் அதனைப்போன்றே கட்டாயத்தில் வரும்
காதலும் திணிக்கப்பட்டதாகவையன்றி
ரசனையாகாது காதல்

கட்டாயத்தில் பின்னப்படும் காதல்
நொடியின் முடிவில் முறிவையே பிடிக்கும்
பிரிதலைப்பற்றியே திணிக்கும்
முறிவே இலக்கென பயணித்தல் காதலாகிடுமா?

காத்திருந்தாலும் காலம் சோதனையேறிய
வேதனையாகி போனாலும்
சேரத்துடிக்கும் காதலுக்குள் அருகாமை ஒன்று
மறைமுகமாய் உணர்வில் கலந்திருக்கும்.

சிடுசிடுத்தாலும் சிலிம்பி வழியாத காதல் என்றுமே
விடுப்பை நிறுத்தி பிரிதலை என்னுவதே இல்லை.

தொட்டதுக்கு குறை
கட்டியதெல்லாம் பிழை
ஒட்டியதெல்லாம் கறையென உளறிடும் உறவினை
வெறுத்தொதுக்கிட தான் தோன்றும்
அங்கொருக்காதல் நிலைப்பை விட்டு தூரமாகிடும்.



கவிஞர் ஜஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (புத்தளம்)

கரங்களில்
வரைந்திட்ட
மருதானியின்
அழகு.

விரல் பிடித்தே
வீணையாய்
மீட்டியே.

வரிகளின் நிறங்களின்
தொடுதல்களின்
மகிழ்ச்சியில்.

எதிர்கால வரவின்
இன்பத்தில்
திளைத்திடுவோமே!



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# எனதுயிர் நட்பே!

பொன்னான நிமிடங்களை
பொக்கிச நினைவுகளை
மீட்டிட துடிக்கிறது காலம்

தாயவள் கருவிலே சுமந்திட
தந்தையவன் மனதிலே சுமந்திட
ஆசான் பள்ளியிலே சுமந்திட

அறிமுகமெதுவுமின்றி ஜாதிமதபேதமின்றி
கொள்கைகளை வகுத்திடவும்
இன்பங்களில் மட்டுமல்ல
துன்பங்களில் மட்டுமல்ல
எதிலும் நானிருப்பேன் என்றவோர் குரல்
அது நட்பின்குரல்
அது நட்பின் அடையாளம்



ஊர் பார்த்தாலென்ன
பார் பார்த்தாலென்ன
எமையேது வஞ்சித்தாலென்ன
உன் நிழலாய் நானிருப்பேன்
என்றவொருவார்த்தை
ஆயிரம் துன்பங்களை
ஓர் நொடிப்பொழுதில் மழுங்கடிக்கும்

சிறந்தநட்பாய் உன் உயிராய்
உதிரமாய் யாதுமாய்
தொடர்வேன் உன் ஆயுள்வரை
உன்னோடு நானிங்கு!

கவிஞர் இ. தேவர்மன், இலங்கை

# எந்தையதிகாரம்



எழுத்தறிவித்து
எண்ணங்களை வசப்படுத்தி

எஃகாம் தைரியம் வளர்த்து
எப்போதும் உடனிருந்து

என்னை ஆளாக்கிய எந்தைக்கு
எப்படி உரைப்பேன் நன்றி?

தந்தையதிகாரம்
தானாக ஊறும்

தவிக்கும் நெஞ்சில்
தாளாத ஏக்கம்

தரணியில் உயிர்க்கும்
தியாகத்தின் வண்ணம்

தேம்பியே அழுகிறேன்
தேடியே அலைகிறேன்

திரும்பிய திசையெங்கும்
அவரது திருமுகமே

தோன்றிடக் காண்கிறேன்
துவண்டு துடிக்கிறேன்

தேவசொர்க்கச் சோலையில்
துயின்றிடும் எந்தையவருக்கு

தனயையிவளின் பிரார்த்தனைகள்
தண்தோகையென விரியட்டும்

தீரா இறையருளவருக்கு
தணியாது கிட்டட்டும்.

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# கிறங்கிப்போயிருக்கிறேன்

வெகுளியானவள்
கிறுக்கச்சி
என்னென்னவோ
சொல்லி இருந்தார்கள்
தெரிந்ததுதானே நேசித்தேன்
அத்தனை வெகுளித்தனங்களையும்
கிறுக்குத்தனங்களையும்
பொறுத்துக்கொள்கிறேன்
பல தருணங்களில்
அளவுக்கதிகமாக ரசிக்கவும் செய்கிறேன்
கிறங்கிப்போனதின் வெளிப்பாடு
இப்படியெல்லாம் செய்யுமோ.



கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# கோடை கால மரங்கள்

மரங்கள் விதைக்கும்
அதிசயங்களுக்கு
மொட்டை மாடிகளும்
வீட்டு வாசல்களும்
கோடை கால மரங்களாக

சிறு சிறு
குவலயங்களில்
மேகங்கள் செய்வோம்
தொண்டை நனைத்து
சிறகுலர்த்தட்டும்



கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

காவ் முளைத்த கவிதை
கண்களில் மின்னல் கொண்டு
கொஞ்சி விளையாடும் மழலை.
அல்லி மலர் போன்ற
முகத்தை பார்த்தாலே.
அள்ளி கொஞ்ச ஆசைதான்
உன் பூமி தொடும்
"பாத சுவடுகள்"கண்டு
பட்ட மரமும் துளிர்த்ததே!
மலடியின் மடியில்
மறு பிறவி கொண்ட
நீயே என்
"கால் முளைத்த கவிதை"



கவிஞர் உஷா தங்கவேல், அரியலூர்

# எங்கள் பாரத தேசம்

எங்கள் பாரத தேசம் ஒற்றுமையின் சின்னம்
வேற்றுமையில் ஒற்றுமை காணும் எங்கள் தேசம்.

உழைக்கும் மக்கள் யாவரும் ஒருங்கே அமைந்த தேசம்
தேசியமும் தெய்வீகமும் மூச்சாய் கொண்ட தேசம்.

கொள்ளையனாய் வந்த வெள்ளையனை
ஒன்றாய் ஒற்றுமையுடன் எதிர்த்த குணம் கொண்ட தேசம்.

*அகிம்சை* என்ற ஒன்றையே ஆயுதமாய் கொண்ட தேசம்
வெள்ளையனை வென்று விரட்டி அடித்த தேசம்.

சித்தர்களும் புத்தரும் தோன்றிய எங்கள் தேசம்
மகான்கள் யோகிகள் அருள் பெற்ற தேசம்.

ஆன்மீகத்தின் வழியே அன்பு மழை பொழியும் அற்புத தேசம்
அடிதடி வன்முறை இல்லாத தேசம்.

அன்பு நட்பு பாசம் என உறவு சொல்லும் தேசம்
மனிதம் போற்றி மனிதம் காக்கும் மாசற்ற தேசம்.

*எங்கள் பாரத தேசம்* ஒற்றுமையின் சின்னம்
அறம் தான் வாழ்வென அன்பு போற்றும்  தேசம்.

கவிஞர் ஜேப்பி @பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

தாய்த் தமிழை
தளிர்க்க ஏந்தி
தனித்துவமான மொழியோடு
வழித்தோன்றல் வந்து

ஏட்டு ஓலைகளில்
என்றும் மாறாது
பாட்டு வரிகளை
படிக்கக் கொடுத்து

இன்னிசையோடு என்றும்
இனிப்பாய் இனித்து
இசையாகிய கவிதைகளே




தாளிலும் நூலிலும்
தங்கமாய் மின்னும்
துளித்துளி மழையாய்
துளிர்க்கும் மண்ணில்

ஆன்றோரும் சான்றோரும்
புலவர்களும் பாடியது
ஔவையின் புகழோடு
அவையிலும் ஓங்கியது

எழுதுகோலின் வரிகளாய்
உயிர்த்துடிப்புப் பெற்றது
கவிதையெனும் காலச் சுவடு
காப்பியவழி ஒளிமயமானது

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி, இலங்கை

# தொடரி

தொடர்ச்சியான
உன் பசுமைக்குள்
தொலைந்த என் மனதும்
மீளாத வரம் கேட்குது
உன்னருகிலே
வாசம் செய்திட
தருவாயோ தள்ளிபோவாயோ



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

அழுகையுடன் கூடிய பிறப்பும்
அழுகையுடன் கூடிய இறப்பும்
புரியாத புதிர்தான்
இந்த பிரபஞ்சத்திலே




கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# நிலையான உறவு

முத்தான பேச்சுத்தனை
அன்பு மழையாக பொழிந்தவளே
நீங்கா நிழலாய் என்கூடவே இருப்பவள்
எனக்கு துணையானவள்

உயிரிலும் மேலானவள்
என் முகச் சிரிப்பொலிக்கு காரணமானவள்
அதீத அதிசயமாக என் வாழ்வில் உதித்தவளே
எனக்காக அனைத்தையும் விட்டுக் கொடுப்பவள்
தட்டியும் கேட்பவள் பலரின் வீண் பேச்சுக்கு
எனை ஆளாக விடமாட்டாள்
விழிகள் விழித்திருக்க அவள் மடியிலே நான் உறங்க
என் கவலைகளும் மறக்க வைக்கும்
அவளை நினைக்கையில் என்னில் பல எதிர்பார்ப்புகள்

ஆயிரம் வருடம் கூடவே வாழனும் போலவே
இவ்வையகத்தில் எதற்கு ஈடாக அமையா செல்வம்
வர்ணிக்க வார்த்தைதான் உண்டோ
அவள் உலகம் சிறிதானாலும்
என் உலகம் அதில் அவள் என்றுமே மகாராணியே
என் உயிரிலும் மேலான எனக்குத் தாயாக அன்பு தோழியாக
பாசமும் வேசமும் இன்றிய நிலையான உறவும் நீயே அம்மா!

உனக்காக இவ்வரிகள் சொந்தமானது
நீ என்றும் விட்டுப் பிரியாமல் இருக்க வரமாக கேட்பேன்!
இறைவனிடத்திலே



கவிஞர் கவி மலர், அஹ்லா ஹபீப் (இலங்கை)

# நீதியான சமூகம் கட்டி எழுப்புவோம்

இன்பத்தை தருகின்ற சமூகம்
துன்பத்தை தரவல்லது
வன் சொல்லில் நாள்தோறும்
அழவைக்குதே இதயத்தை
மனிதகுலம் சீர்குலைக்க
பல வடிவில் பல பெயர்கள்
மாற்றம் செய்ய ஒருவனும் இல்லையோ
இவ்வுலகில் நாம் காணவே
காலம் கடந்து போனாலும்
அடிமை இன்றி வாழ
சுதந்திர சமூகம் படைக்க
நாம் ஒன்றிணைவோம்
என்றும் எதிர்மறைவான
போராட்ட சமூகத்தை அல்ல
நல்லெண்ணம் கொண்ட
நீதியான மானிட சமூகத்தை
கட்டி எழுப்ப என்றும் ஒன்றிணைவோம்
நம்பிக்கையுடன் அனுதினமும்



கவிஞர் ஏ. எம். எம். பேகம், இலங்கை

புதுவித உற்சாகத்துடன் சீருடை அணிந்து
உத்வேகத்துடன் நடந்த வாயிலை
வலது காலால் வைத்து கடக்கும் தருணம்
என்னுள் தோன்றும் சந்தோஷம்


வகுப்பறை கிரிக்கெட் அதிலும் ஏகப்பட்ட நிபந்தனைகள்
குப்பை காகிதத்தை கட்டாக்கி செய்த பந்து
வாசகசாலை வாசிப்பே வழக்கமாக்க
வழமையாக செல்லும் இடம்
நட்புக்களுக்கிடையான கலகலப்பான பேச்சு
கூடி பேசி ஆடி பாடி கழிந்த நாட்கள்
இனி நினைத்தாலும் வருமா
இவ்வின்பங்கள் மீண்டும் தருமா
மேசை சுவர் மீதான கிறுக்கல்கள்



ஒரு தட்டில் பல கை இட்டு இடைவேளை தருணங்கள்
குழாய் மீது இரு உள்ளங்கையில் தாங்கி அருந்திய பொழுதுகள்
அன்பு ஆசான்களின் அழகிய கற்பித்தல்கள்
தோளோடு தோள் சாயும் தோழர்களின் தோழமை
புத்தாப்பை பென்சில் பற்றிய சீருடை
பாக்கெட் மணி எல்லாம் நினைவில் வருகையில்
இவை அனைத்து இனிமையான விழுதுகள்
நிரந்தரமாற்று இப்பள்ளி வாழ்க்கை என்றும் நீங்கா நினைவில் நான்.

கவிஞர் எம். எம். முஹம்மத், அக்குறணை (இலங்கை)

# கனவு மெய்ப்பட வேண்டும்



விழித்திரையில்
விழுகின்ற காட்சிகள்
வெடிச்சத்த முழக்கங்களோடு
போராடும் உறவுகளின்
விம்பங்களாய்த் தெரிகின்றன.

விடை தேடும்
வினா வாக்கியங்களாய்
விடியலுக்காய்
விழி மூடாது போராடி
உயிரிழக்கும்
உறவுகளின் அவலங்கள்
அழு குரல்கள்
காதோரம் ஒலிக்கின்றன.

கண் மூடுகையில்
கருணையற்ற
காடையர்களால்
குருதி வெள்ளமாய்க்
கொன்று குவிக்கப்படும்
குழந்தைகளின் காட்சி
கனவுகளாய்த் தெரிகின்றன.


சயனம் மறந்து தனிமையிலும்
சமூகத்தோடுமாய்- அவன்
சந்நிதானத்திலும்
சஜ்தாவிலும் நின்று தொழுதும்
சமர்ப்பித்த வேண்டுதல்கள்.
பிழை பொறுத்தல்கள் கேட்ட
பிரார்த்தனைகள்
ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

கடும் பட்டினியிலும்
கலிமாவுடன்
கடைசி மூச்செனக்
கையேந்திப் போராடும்
கண்மணிகளின்
கனவுகள் மெய்ப்படவேண்டும்!

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷா, கம்பளை

# நீர்க்குமிழி

கடற்கரையில் நடக்கையிலே கண்ணில் பட்டதொரு
காட்சி! நடப்பவர்கள் முகங்களிலே மோதி
உடைந்து கரைந்துபோகும் சோப்புக் குமிழிகள்!
கரைசலைத் தொட்டு ஊதுகோல் வழியாக
காற்றை ஊதுவதால் உருவாகும் குமிழிகள்
சிறுவர்களை ஈர்த்து, சிரிக்க வைத்தனவே!
சிறுவர்கள் விளையாட்டில் நானூறு ஆண்டுகளாய்
நீர்க்குமிழி இடம்பெற்ற சான்றுகள் பலவுண்டு!
பறந்து மிதக்கின்ற நீர்க்குமிழிகளை காண்கையிலே
சிறுவயதின் நினைவலைகள் நம்முள் மலர்கிறதே!
வழுவலைக் குழைத்துக் கைகளைக் குவித்தூத
நழுவிடும் குமிழிகள் சிறிதும் பெரிதுமாய்!
எட்டிப் பார்க்கும் குழந்தையைப் போல்
நொடிகளில் தலைகாட்டி மடிகிறதே குமிழிகளும்!
ஒளியலைக் குறுக்கீட்டால் உருவாகும் வண்ணங்கள்
களிப்பூட்டி மகிழ்விக்கும் காண்பவர் கண்களுக்கும்!
விளையாடும் நீர்க்குமிழி வீழ்வது நொடிகளிலே!
மாயை என்றுணர்ந்தாலே மனம் தெளிவடையும்!
காற்றின் கரங்களில் மறைந்திடும் நீர்க்குமிழி
நேற்றிருந்தோர் இன்றில்லையெனும் மாற்றமிலாத் தத்துவத்தை
மறந்துவிடாதே என்று நினைவூட்டிச் செல்கிறதே!
நிறைவேறாக் கனவுகள் நெஞ்சுக்குள் உருவாகி
நொறுங்கிடும் நீர்க்குமிழ்கள் ! பிறந்து வளர்ந்து
மறையுமுன்னே மிளிர்ந்திட வேண்டும் நீர்க்குமிழ்போல்!
சீற்றம் தவிர்த்து சிரித்து மகிழ்ந்திருப்போம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

## திருமாலை 06-10

பாவச்சுவர் பின்பதுங்கும் மானுடர்காள்! நமனுடைய
முறைநாளை அறிகிலாதீர்! உடலழகு செயல்விடுத்து
அரங்கன்புகழ் பாடிடுவீர் முதலுரைக்கும்! இரண்டாவதில்
இந்துமதம் கற்றுணர்ந்தோர் இழிமதங்கள் பௌத்தஜைனம்
பின்பற்றார்! அவற்றினையே காணாரே! அவைபற்றிக்
கேளாரே! சிரமறுப்பினும் மரணமிலா இலங்கைவெல்
இராமனவன் வழிபடத்தான் தெய்வமாவார்! மூன்றாவதில்
திருவரங்கனை இழித்துரைப்போர் சிரமறுக்க தொண்டரடி
சீற்றமொழி பகர்வாரே! அச்சொற்கள் நோய்பயக்கும்!
வாழ்வழியும்! அன்னோரை சிரம்கொய்தல் வேண்டுவதாம்!
அரங்கந்தனை போற்றிட்டே வழிபடுதல் இனிதாகும்!
திருமாலே ஒரேதெய்வம்! வேறென்பார் மதியிலாதார்!
ஆநிரை மேய்த்தோன் கழலிணையை பணிவோமே!
அன்னவனே அரங்கனாவான்! தொண்டரடிப் பொடிக்கூற்றே!
பலதெய்வம் தோற்றுவித்து நன்மைபல சேர்த்திட்டோன்
அரங்கனல்லால் வேறில்லை! கருடவாகனன் மட்டிலுமே!
அவனன்றி மற்றோர்கள் தம்பாலே செல்வத்தை
வேண்டுவது மூதேவி தன்னிடத்தே பெருந்தனத்தை
கோருவதே போன்றதாகும்! ஆறுமுதல் பத்தறிந்தோம்!
மீதமுள்ள முப்பத்து ஐந்ததுவும் தொடர்ந்திடுமே!




கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# வலியே வாழ்க்கையா



யாருடைய வாழ்க்கையும்
யாராலும் தீர்மானிக்க முடியாது
இங்கு வாழ்ந்து சென்றவர்கள்
வலிகளும் வரிகளும்
யாருக்கும் பொருந்தாது
அவரவர் வாழ்க்கையில்
அவரவர்களின் வலிகள் வரிகளாகும்
காலம் கல்லடியாக இருக்கலாம்
ஆனால் அதன் ஓசை ஒருபுறம் வலி ஒரு புறம்
அதை கடப்பவர்களுக்கு தான் தெரியும்
கண்ணீர் கலங்கிய மனம்
ஒருநாள் காவியமாகும் என்ற நம்பிக்கையே
இங்கு பலரின் நயமாக நாளைய தினமாக
அந்நொடி அவனும் எழுத தொடங்கினான்.

கவிஞர் ம. செல்லமுத்து, நூர்த்தப்பூர்



சுருக்கென குத்தும்
மொட்ட வெயிலும்
பட்டென சுழற்றும்
சூறைக் காற்றும்

பதுவிசா பதுங்கி
முழுச்சுக் கெடக்கு
முந்தா நாள்
பெய்த மழையில்!

வறண்ட கம்மாயும்
சுருண்ட நீரோடையும்
விருட்டென வேகம்
சடுதியில் சரசம்!

சோளக் காடும்
மஞ்சநத்தி மரமும்
துளிர்த்துக் கும்பிடுது
தூறல் மழையை

கவிஞர் யாழிசைசெல்வா

நீ பணிவில் இயல்
பேச்சில் இசை
பார்வையில் நாடகம்
*

ஒற்றைச் சொல்
உயிரையே குடிக்கிறது
உன்னிடம் யாசிக்கையில்
*

ஏன் இசைத்தடயங்களில்
உன் சுரங்களே
சிம்பொனியாயின
*

உன்னைப் பார்த்து
என்னை மறக்கிறேன்
யார் குற்றம்
*

எந்த ராகத்தை
இசைக்க வைப்பது
உன் குரலின் ஓசைக்கு
*

சில்மிஷக் குற்றம்
தண்டிக்கிறாய்
முத்தச் சவுக்கடியால்
*

கனவில் மிதக்கிறேன்
பார்வையில் தின்கிறாய்
உயிரோடு நான்
*



எத்தனை வருடங்கள்
பிரிவின் வேளை பிரிந்தபின்
அத்தனை முத்தம் கொடு
*

நேற்றைய நம் சண்டை
அள்ளித் தந்தது இன்று
நெடுநாளைய சொர்க்கத்தை
*

நீயும் நானும்
கரைகள்
வாழ்வு நதியைச் சுமப்போம்
*

ஊஞ்சல் கட்டி ஆடும் உயிர்
ஒட்டி வரும் உன்னோடு
முத்தத்தால் நிறுத்து

கவிஞர் இளையவன் சிவா

தன் ஒட்டு மொத்த கோபத்தையும்
பிறரிடம் காட்டினால்
பொசுங்கி போவார்கள் என்றெண்ணி
அடுத்த தலைமுறையை
சீர்திருத்த சொன்ன வார்த்தை தான்
சாதிகள் இல்லையடி பாப்பா - மகாகவி
***.
சலுகைகள்
கேடயம்
ஆகிவிட்டன.
***
ஒரே கோட்பாட்டினுள்
உலகை அடக்குங்கள்
" தரமான கல்வி "
***
உரிமைக்கு பிறரை உதைத்தால்
அவனுக்கு வலிக்காதா
அவனுக்கும்
உரிமை உணர்வு உடம்பு உறவு
அனைத்தும் உண்டு தானே
***
எப்படி யோசித்து பார்த்தாலும்
போராட்டத்தில் வன்முறை ஆகாது
***
கல்வி
பெண்களை பாதுகாக்கும்
ஆண்களுக்கும் அதையே செய்யுங்கள்



***
மீனவ குழந்தைக்கு
நீச்சல் பயிற்சிக்கட்டணம் - 1500
இக்கால கல்வி முறை
***
என் வயிற்றையும்
தனி பிள்ளைப்போல்
பார்த்து கொண்டாள்
தாய்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

## அந்தகணத்து உணர்வுக்கு ஏற்ப

எண்ணியபடி செயல் அமைய
'இனி எல்லாம் வெற்றிதான்'

இழப்பின் வேதனையில்
'இப்படியே போனால்
என்னசெய்ய?

ரசிக்கப்பட்ட உதட்டு மொழிக்கு
'இது தொடரணும்'

அனுபவித்த பொழுது போக்குக்கு
'எப்பவும் கிடைத்தால் நன்றாக இருக்கும்'

சரியாய் யூகித்த பின் நிகழ்வுக்கு
'இப்படி யோசிக்கணும்'

ரசித்து ருசித்த உணவுக்கு
'இதை மாதிரி காலம்
முழுமைக்கும் கிடைக்கணும்'

என அந்த கணத்து உணர்வுக்குஏற்ப
எண்ணங்களாய் மனதில்.

*****

அவைகள் தவிர்த்து

உயிரான உறவை
உயிர்காத்த மருத்துவரிடம்
'நீங்க தெய்வம்'

எதிர்பார்த்த
வெற்றி கொடுத்த மகிழ்ச்சியில்
'இனிமே எனக்கு என்ன வேண்டும்'

முன்னர் சாதித்த பொழுதுகளின்
நம்பிக்கையில்
புதியவை தொடங்குகையில்
'சாதாரண விஷயம்'

பின்னர் சொன்னவைகள்
புத்தியை புறந்தள்ளி
மலர்ந்த மிகைவார்த்தைகள்தான்

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை
மனதில் தோன்றிய
உள்ளத்து உணர்வு

கவிஞர் சுந்தர்ராஜன், மானாமதுரை

## பா வகை: இன்னிசைப் பஃறொடை வெண்பா




போர்க்குணம் பெற்றே பொருந்தியே வாழ்ந்திடு
யார்க்கும் பணியா எழிலுமே கொண்டிடு
ஏர்போல் நிலத்திலே ஈட்டியாய் நின்றிடு
கார்போல் பொழிந்தே கனிவுடன் வாழ்வாய்
புகழினைப் பெற்றே புவியில் சிறப்பாய்
பகலவன் போன்றுமே பாரில் ஒளிர்வாய்
நகர்கிற வாழ்வினில் நன்மையே செய்வாய்
பகர்கிற பண்பால் பயனது கொள்வாய்
தன்னுரிமை காக்க தரையினில் போரிடு
இன்னுயிர் தந்தே எதிலுமே வென்றிடு
நன்னெறி கொண்டே நிலத்தில் நிலைத்திடு
வன்மையும் கொண்டுமே வாழ்வாய்

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

அத்தியாயம் 4

# ஜெயிப்பதில் மிக்க மகிழ்ச்சி (நவீனம்)



முதலில் உங்களுடைய பணத்தில்தான் நான் சொந்தமாக வியாபாரம் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். தனியாக எந்த ஒரு முதலீடும் இல்லாமல் உழைத்து முன்னேறினால்தான் எனக்குப் பெருமை என்பதை உணர வைத்து விட்டீர்கள். ரொம்பா நன்றி."

"உன்னைக் காணமல் இருப்பதில் பிரச்சினை இல்லை. எனக்கு உன் அம்மா மேல்தான் பயம். அவளை நீ எப்போதும்போல் சந்திக்க வேண்டும். இது என்னுடைய அன்பு கட்டளை என்று கூட எடுத்து கொள்ளலாம்."

"இனி நீங்கள் கட்டளை போட்டாலும் சரி. கட்டிப்போட்டாலும் சரி. இந்த அரசு தனி மனிதன். என் அம்மாவிற்காகவோ, நான் என் கொள்கைகளை விட்டுக் கொடுக்கத் தயாராய் இல்லை. முடிந்தால் நான் இருக்கும் இடத்திற்கு வந்து என்னைப் பார்த்துக் கொள்ளுங்கள்." என்று வேகமாக எளியே கிளம்பினான்.
"என்னங்க... அவன் பாட்டிற்கு கிளம்புகிறான். நீங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்." என்றாள் ராணி அழுகையோடு.

.................................................................................

"நீலா என்னதான் சொல்லிறாய்?" பெப்சியை உறிந்தபடி கேட்டான் அரசு.
"கொஞ்சம் யோசித்து பாருங்கள் அரசு. ஒரு கி.மி.தூரம் எங்கேயாவது நடந்து போயிருப்பீர்களா? அல்லது எப்போதும் பையில் குறைந்தது பத்தாயிரம் ரூபாயும், கிரெடிட் கார்டும் இல்லாமல் எளியே வந்திருப்பீர்களா?" ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டே கேட்டாள் நீலாம்பரி.

"அதற்காக எப்போதும் அப்படியே இருக்க வேண்டும் என்று நினைக்கிறாயா? சொந்தக்காலில் நின்று ஜெயித்து வர முடியாதா?" அயர்ந்தவாறு கேட்டான் தமிழரசு.

"உங்கள் சுயமரியாதை, தன்மானம் எல்லாவற்றையும் ஒத்துக் கொள்கிறேன். அவைகளெல்லாம் கண்டிப்பாக தேவை. ஆனால் உங்கள் தந்தையின் இவ்வளவு பெரிய வியாபார சாம்ராஜ்யத்திலே கலந்து இன்னும் அதை விருத்தியடைய செய்வதை விட்டு விட்டு சொந்தக் காலில் நிற்கப் போகிறேன்...

கவிஞர் இரஜகை நிலவன்

எனக்கு ஒரு சதவீதம் கூட சம்மதமில்லை. அப்படியே நீங்கள் ஜெயித்தாலும் இந்த இளமையும் நாட்களையும் தொலைத்து விட்டு பிறகு கண்டிப்பாக அய்யோ இழந்து விட்டோமோ என்று வருத்தப்பட்டுக் கொண்டு தேடப் போகிறீர்கள்."

"நிலா எதையாவது பெறுவதற்கு எதையாவது இழந்துதான் ஆகவேண்டும். அது கூட தெரியாமலா நான் வீட்டை விட்டு வெளியே வந்திருப்பேன்."

"உண்மையிலே நீங்கள் பிடிவாதமாக இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எனக்கு போன் பண்ண கையில் பணமில்லாமல் என் வீடுவரை நடந்து வந்திருக்கிறீர்கள். எப்போதாவது இது மாதிரி நடந்திருக்கிறதா?"

"இதே மாதிரி எத்தனை முறை ஐஸ்கிரீம் பாருக்கு வந்திருக்கிறோம். எப்போதாவது என் பர்சை எடுக்க அனுமதித்திருபீர்களா? இப்போது என் கையை எதிர்பார்த்துக் காவல் நிற்கிறீர்கள். இது முடியாத விஷயம். கொஞ்சம் யோசித்து பாருங்கள். இன்னும் இரண்டு வேளை உணவு யார் தருவார்கள். நான் பணம் தந்தாலும் நீங்கள் ஏற்றுக் கொள்ள உங்கள் தன்மானம் ஏற்றுக் கொள்ளுமா? இனி நீங்கள் வேலை தேடி சம்பளம் வாங்கி .." என்று நீலாம்பரி முடிப்பதற்குள் "நீலா நான் வேலைக்குப் போவதாக எந்த ஐடியாவும் கிடையாது." என்றான்.

"அப்புறம் சாப்பாட்டுக்கு என்ன செய்வீர்கள்?"

"ஏதாவது பிஸினஸ் பண்ண வேண்டும். என்ன என்பதில்தான் இன்னும் ஆரம்பப் பிரச்சினையே. ஸ்டார்டிங் டிரபிள் என்று ஆங்கிலத்தில் சொல்ற மாதிரி என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

"மருந்து ஏற்றுமதியில் அறுபது சதவீதம் லாபம் வருகிறது" என்றான் விக்கி. பிளைவுட் வியாபாரத்தில் வெகுவான வருமானம் என்றான் சுந்தர். மனோவிடமும் இன்னும் பேச வேண்டியதிருக்கிறது. எப்படியாவது ஒரு வியாபாரத்தை தொடங்க ஆரம்பித்து விட்டால் திரும்ப அடுத்து அடுத்து என கிளைகளை பரவ விடலாம்" என்று அரசு முடிப்பதற்குள் வேகமாக விழுந்து விழுந்து சிரித்தாள் நீலாம்பரி.

கொஞ்சம் கோபம் தலைக்கேற "ஏன் சிரிக்கிறாய்? என்றான் தமிழரசு.இவ்வளவு பெரிய வியாபாரத்திற்கு யார் மூலதனமிடப் போகிறார்கள்."

அத்தியாயம் 4

ஜெயிப்பதில் மிக்க மகிழ்ச்சி
(நவீனம்)

"இதற்காகவா சிரித்தாய், என் நண்பர்கள். இதில் என்ன சந்தேகமிருக்கிறது?"

"உங்கள் நண்பர்கள் எல்லோரும் அவர்களுடைய தந்தையை நாடித்தான் உங்களுக்கு உதவி செய்ய வேண்டும்."

"அதில் தப்பில்லையே நீலாம்பரி."

"தவறு என்று சொல்லவில்லையே." அவர்கள் உடனடியாக உங்கள் தந்தையைத் தொடர்பு கொண்டு தமிழரசுக்கு "நாங்கள் உதவலாமா" ?என்று கேட்பார்கள்.

"ஓ! அப்படிப்போகிறதோ கதை?....".

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். தமிழரசு இதெல்லாம் தேவை இல்லாத விசயங்கள். ஒழுங்காக வீட்டுக்குப்போய் அப்பாவின் வியாபாரத்தைக் கவனியுங்கள். நாம் ஏற்கனவே பேசியபடி என் அக்காவின் திருமணம் அடுத்த நவம்பரில் முடிந்து விடும். இப்போதே எங்கள் வீட்டில் எனக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

" நம் காதல் யாருக்கும் தெரியாதா?"

"அக்காவிற்கு தெரியும். அவள் என்னை விட பயந்தாங்கொள்ளி. அம்மாவிடம் அரசல் புரசலாக சொல்லி விட்டிருக்கிறேன். அடிக்கடி திட்டிக் கொண்டே யாரடி அந்தக் கடன்காரன் என்று உங்களையே திட்டிக்கொண்டு சீக்கிரமே எவனாவது நல்லவனை பார்த்து கட்டி வைக்க வேண்டும் என்று புலம்பிக்கொண்டே இருப்பாள்."

"அப்படீன்னா நான் நல்லவனில்லையா?"

தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

இயல் , இசை, நாடகமென தமிழ் இலக்கிய மொழி மூன்று பிரிவுகளை தன்னகத்தே கொண்டிருப்பினும் நாடகம் ஒன்று தான் இயலையும், இசையையும் கூட தன்னுடன் இணைத்துக் கொண்டிருப்பது ஆகும்.

நாடகவடிவம் என்பது இன்று நேற்றல்ல, சங்க காலந்தொட்டே மக்களிடையே புழக்கத்தில் இருந்த ஒரு வடிவமாகும். பண்டைய காலங்களில் வேந்தர்களுக்காக நடத்தப்பட்ட நாடகங்களை வேத்தியல் என்றும், மக்களுக்காக நடத்தப்பட்ட நாடகங்களை பொதுவியல் என்றும் அழைத்தனர். சங்க காலத்தில் குரவைக்கூத்து, பாவைக்கூத்து, துணங்குக்கூத்து என பலவகை நாட்டிய வகைகள் இருந்தமைக்கு சான்றுள்ளது.

இன்றைய திரைப்படங்களுக்கு முன்னோடி வடிவம் நாடக வடிவமே. நாடகமென்பது டிராமொனியன் ( Dramonian ) என்ற கிரேக்க சொல்லின் வேர்ச்சொல்லாகும். தமிழ் நாடக உலகின் பிதாமகர்கள் பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள் போன்றோரெல்லாம் நாடகக்கலையை வளர்த்தெடுத்த முதல்வர்கள் ஆவர். நாடக உலகில் அவ்வைசண்முகத்தை அறியாதோர் எவருமிலர். அவரது கூற்று, ஒரு நாடகமென்பது நாட்டில் நடந்த, நடக்கின்ற, நடக்கப் போகின்ற விசயங்கள் அனைத்தையும் தெளிவுபடுத்துவதாக இருக்கும், அதாவது நாடு+ அகம் என்பதே நாடகம் என்பதாகும். நாட்டின் அகத்தை விவரிப்பதே நாடகம் என்றார் அவர்.

தமிழ் இலக்கிய நூல்களான சிலப்பதிகாரம் நாடகம் பற்றி தெளிவு படுத்துகிறது. அது மட்டுமின்றி மனோன்மணியம் முதல் தமிழ் நாடக இலக்கிய நூலாகும்.
பல திரைப்படக் கலைஞர்களின் நடிப்புப்பசிக்கு சரியான தீனி தந்திருப்பது நாடகங்களே எனில் அது மிகையில்லை. ஏனெனில் ஒரு கலைஞனின் நடிப்பிற்கு உடனடியான சன்மானம் ( கைதட்டல் மற்றும் பாராட்டு ) நாடகக் கலையில் மட்டுமே கிடைக்க கூடிய ஒன்று. இதற்கு சான்றாக நடிகர்திலகம் சிவாஜிகணேசன், எம்.ஆர்.இராதா போன்றோரை கூறலாம்.

நாடகத்தின் கதைக்களமும், ஒப்பனையும், அரங்கவடிவமைப்பும் நாடகத்தினை பலரும் ரசிக்கவைத்து விடும். பிரம்மாண்ட அரங்க வடிவமைப்புடன் மந்திர தந்திர காட்சிகளையும் நாடகத்தில் புகுத்தியவர் ஆர்.எஸ். மனோகர் தனது இலங்கேஸ்வரன் நாடகத்தில்.

திரு அனுராஜ், கவிஞர் மற்றும் எழுத்தாளர், போடிநாயக்கனூர்

நூல் அனுபவம்

நாடகம்

இந்த எண்ணங்களினால் ஒரு மாளிகை என்ற நாடக நூலில் மூன்று நாடகங்கள் இடம்பெற்று இருக்கின்றன.

உதயதாரகை எனும் நாடகம் விருந்தோம்பலின் சிறப்பினை விவரிப்பதோடு நட்புறவின் மேன்மையை விளக்குகிறது. குடியினால் சீரழிந்து வாழ்வை தொலைக்கும் குமாரையும் அவனது மனைவி தேன்மலரையும் உதாரணமாக காட்டி, குடிபோதையில் இருந்து மீள ரோட்ரிக்ஸையும், அவனால் துயரத்தில் சிக்கும் எமல்டாவையும் அவர்களுக்கு ஏழ்மையிலும் உதவும் நல்குணம் படைத்த சகாயநாதனையும், அவனது மனைவி எழிலரசியையும் காட்டி குடியின் பாதிப்பை விளக்கும் நாடகமாக இங்கு மிளிர்கிறது

இரண்டாவது நாடகம் எண்ணங்களினால் ஒரு மாளிகை நகைச்சுவையை பிரதானமாக கொண்டு, இந்தி கற்க தனது காதலியைத் தேடி வரும் வாலிபன், அக்காதலியின் தந்தையோடு வீம்பாய் மோதும் நிகழ்வுகள் காட்சியாக விரிகின்றன. பேராசிரியர் அசோகன், அவரது மகள் ஜீவிதா, அவளது காதலன் பிரதாப், தபால்காரர் ஒருவரென குறைந்தளவு பாத்திரப்படைப்புகளோடு ஒரு நகைச்சுவை விருந்தாக படைக்கப் பட்டுள்ளது.


மூன்றாவதாக, நீ உன்னை அறிந்தால் என்ற விழிப்புணர்வு நாடகம். இலஞ்சம் வாங்குவதனால் ஏற்படும் விளைவுகளைச் சொல்லி நகர்கிறது. இலஞ்சத்தில் திளைப்பவனது வாழ்க்கை ஆடம்பரமாகவே இருக்கும் நேர்மையாளனின் வாழ்வு துயரத்தில் தான் கிடக்கும். நேர்மையாளனாக ராஜனும் அவனது மனைவியாக மல்லிகா, ஆடம்பரமாய் வாழும் தனது. கணவனின் கீழ் பணிபுரியும் அலுவலக ஊழியனின் வாழ்வினைக் கண்டு பொறாமையுற்று வெதும்புவதும், கணவனோடு பிணக்கமாகி தாய் வீட்டுக்குச் செல்லத் துணிவதும், இலஞ்சத்தில் திளைத்து துயரடையும் மோகனும் அவனது மனைவியாக தேவிகாவும் மல்லிகாவிற்கு நல்புத்தி வர காரணகர்த்தாக்களாக மாறுகிறார்கள். இந்த நாடகத்தில்.

மூன்று நாடகங்கள் அத்தனையும் முத்தாக பரிமளிக்கிறது. நாடக நூலின் ஆசிரியர் அன்பு நண்பர் இரஜகை நிலவன் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்துக்காரர். நாற்பதுக்கும் மேலான நூல்களை எழுதியிருக்கிறார். அவரது இந்நூலும் அவருக்கு சிறப்பான ஓரிடத்தைப் பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை.

திரு அனுராஜ், கவிஞர் மற்றும் எழுத்தாளர், போடிநாயக்கனூர்

**நூல் அனுபவம்** **நாடகம்**

நாடக நூல் உலகில் இந்த "எண்ணங்களினால் ஒரு மாளிகை " நல்லதொரு வரவேற்பினைப் பெற்றுத் திகழ எனது இதயங்கனிந்த நல்வாழ்த்தினை தெரியப்படுத்திக் கொள்கிறேன்.





திரு அனுராஜ், கவிஞர் மற்றும் எழுத்தாளர், போடிநாயக்கனூர்

# துதிக்கைத் துழாவல்

## நூல் அனுபவம் — கவிதைத் தொகுப்பு

ஜி சிவக்குமார்; முதல் பதிப்பு பிப்ரவரி 2025
பக்கம் 126 ; விலை 140
வெளியீடு மௌவல் பதிப்பகம் வலங்கைமான்
தொடர்புக்கு 94 43 55 82 01




வண்ணாத்திக் குருவி, கொக்கு, சீகார் பூங்குயில், கருங் கொண்டை, மாங்குயில் செம்மீசைச் சின்னாள், செண்பகம் , மாம்பழக் குருவி, கருந்தலை மாங்குயில், பழுப்பு கீச்சான் , நீள் சிறகு கடல் பறவை, கானாங்கெழுத்தி, பாம்புத் தாரா , கோழி , நீலப் பைங்கிளி , பொரி மீன் கொத்தி, வாத்து , நீர்க்காகம் , கரிச்சான் , நெடுங்கால் உள்ளான் , குருட்டு நாரை, புறா, நாமக்கோழி , உள்ளான் , சாம்பல் நாரை , செந்நாரை , எலுமிச்சம் வாலாட்டி , மயில் உள்ளான் , குருட்டுக் கொக்கு , மயில் , மீன்கொத்தி, வெந்தய விரியன், சங்கு நாரை , சிறால் , தாழைக் கோழி , ஆட்காட்டி குருவி, புள்ளி ஆந்தை, வௌவால், செம்மார்புக்குக்குறுவான் , புள்ளிப் புறா

இவை எல்லாம் பறவைகள் என்று நமக்குத் தெரியும். ஆனால் கவிதைகளுக்குள்ளே இவற்றைப் பறக்கவிட்டு அதன்மூலம் கவிதை தொகுப்பு முழுக்க தனது அனுபவங்களையும் பதிவு செய்து இருக்கிறார் கவிஞர் ஜி சிவக்குமார்.

பேருந்து பயணத்தில் தான் கண்டது, வாரம் ஒரு முறை கொடைக்கானல் சவுரிக்காட்டில் இரு சக்கர வாகனத்தில் இயற்கையை ரசிக்கச் சென்று பறவைகளை படமெடுப்பது, தனது அனுபவங்களை பதிவு செய்தது, மதுரையைச் சுற்றியுள்ள அத்தனை கண்மாயிலும் தனது விழிகளாலும் கால்களாலும் இயற்கையையும் பறவையையும் ரசித்து படம் பிடித்தது, பேருந்தில் தனது அனுபவங்களை முழுமையாக உள்வாங்குவது, தான் செல்லும் சுற்றுலா தளங்களின் மீதான ரசனை, கடவுளைக் காணும் மனிதனின் பரவசமும் மனிதனுக்காக காத்திருக்கும் கடவுளின் வேலையும், மதுரை சுற்றியுள்ள கண்மாய்களின் பெயர்களை கவிதைகளுக்குள்

திரு இளையவன் சிவா, நரசிங்கபுரம்

பதிப்பது, பழனி மதுரை இடையிலான பேருந்துகளின் பெயர்கள், இரவில் பெய்யும் மழை எல்லோரையும் எழுப்பினாலும் திறக்காத ஒற்றைச் சன்னல், இணையத்தின் வழியே சமையல் பழகும் ஆண்களின் அவஸ்தை, தலைமுறை தலைமுறையாக மக்கள் புதிய புதிய பண்பாட்டில் தன்னை இணைத்துக் கொண்டாலும் அவர்களை ஒற்றைப் புள்ளியில் இணைக்கும் மாறாத திருவிழாக்கள், புத்தகங்களை பரிசுப் பொதியாக மாற்றும் பெண்ணின் கவனமான வேலைத்திறனை ரசிக்கும் மனம் இலக்கியக் கூட்டத்தில் யாரையும் எதையும் சட்டை செய்யாத மழலையின் குறும்புத்தனத்தை ரசிக்கும் மனம் என புதிய புதிய தளங்களை எழுதி தனது முத்திரையை பதித்திருக்கிறார் கவிஞர்.

தனக்குப் பிடித்த யானை தொடங்கி காட்டு மாடு மான் கூட்டம் குரங்குகள் ஓனான் மீன் வண்ணத்துப்பூச்சி மின்மினி பூச்சி குதிரைகள் முயல் பூனை என தான் பிரியமுடன் ரசிக்கும் ஒவ்வொரு விலங்குகளையும் கவிதைகளுக்குள் புகுத்தி அகச்சித்திரங்களை சொற்சித்திரங்களுக்குள் இழைத்து காமத்தின் ஊடுறுவலை அருமையாக வெளிப்படுத்தி மனதோடு இழைத்துச் சொல்கிறார் கவிதைகளின் வழியே.

"சலிப்பூட்டும்படிக் காணக் கிடைக்கிறார்கள்
பால்யத்தில்
புதர்களில் மறைந்து பார்த்திருந்த நீல மனிதர்கள்.
வீடுகளில் அலுவலகங்களில்
ஆதி விளையாட்டொன்றை
சலிப்பின்றி நிகழ்த்திக் கொண்டே இருக்கும்
அவர்கள்
கற்றுக் கொடுக்கிறார்கள் ஆசுவாசப்படுத்துகிறார்கள்
வக்கிரப் படுத்துகிறார்கள்
குற்றவுணர்வைத் தூண்டுகிறார்கள் நம்முள் சதா உறுமும் மிருகமொன்றின்
பிடரி மயிர்களைக் கோதியபடி அதற்கு இரையளிக்கிறார்கள்.""

"சிரித்தபடி
உந்தியெழுந்து
கைகளை விரித்து
மெல்லச் சிறகசைத்து
கீழிறங்கி, கீழிறங்கி, கீழிறங்கி விரிசிறகுகளொடுக்கி

திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

உன் முன்னமர்ந்து
சிறகுகளைக் கோதுகிறேன்
அள்ளியணைத்துக் கொள்கிறாய்"

இது கவிஞரின் சுய சித்திரம். இதைத்தான் நூல் முழுவதும் பறவைப் பார்வை எனவும் பறவையின் இறகு கொண்டு வானம் அளப்பதை போலவும் கவிதை வரிகளில் நம்மை எண்ணங்களோடு இணைய வைக்கிறார் கவிஞர்.

'பிறந்த ஊரால் கைவிடப்பட்டவர்கள்' தலைப்பிலான கவிதையின் கடைசி வரிகளை உற்றுக் கவனியுங்கள் ஒவ்வொருவருக்கும் அந்த அனுபவம் மனதை விட்டு அகலாமல் கண்ணீரை வர வைக்கும்.

"---------------

வேலை நிமித்தம் வெளியூருக்கு வாழ்க்கைப்பட்டவர்களை விசேஷங்கள், துக்க நிகழ்வுகளை மறைத்து
முதலில் சொந்த ஊரின் மனிதர்கள் கைவிடுகிறார்கள்
பிறகு
பிறந்த ஊரே கைவிட்டு விடுகிறது".

'ஏழாவது நாளில் மட்டும் உறங்குகிறவள்' கவிதையின் வழியே பெண்ணின் குடும்ப வாழ்வு அதன் வழியே அவள் தன்னை எப்படியெல்லாம் கட்டுப்படுத்திக் கொண்டு ஞாயிறுக்காக காத்திருக்கிறாள் என்பதையும் அழகான காதலோடு எழுதிச் செல்கிறது.

இன்றைய இணைய வலையின் ஒவ்வொரு நகர்வையும் கண்ணுறும் கவிஞர் அதன் சாதக பாதகங்களை முழுமையாக விரித்துரைக்கிறார். முகநூலில் ஒவ்வொரு முறையும் அவர் பதிவுகளை இடும்போது அவருக்கு நேரும் அனுபவம் என்பது அவருக்கானது மட்டுமல்ல நமக்கானதும் கூட.

"பேஸ்புக்ல தினமும் உங்கள பார்க்கிறேன்
உங்க போஸ்ட் எல்லாம் சூப்பரா இருக்கு"

என்ற ஒரு கவிதையின் இறுதி வரிகள் நமக்கும் பொருந்தும் தானே.

"ஒரு வருடத் தனிமையின் சூனியத்தை
துடைத்தழித்து நிறையும் பாதங்களின் நினைவில்
இரை தேடப் போன குஞ்சுகளின் வருகைக்காக
கூட்டில் காத்திருக்கும் இந்தத் தாய்ப் பறவை"


என்ற 'பாதங்களால் நிறையும் வீடு' கவிதையின் கடைசி வரிகள் இன்று

எத்தனையோ தாய்களை நினைவுபடுத்துகிறது. குழந்தைகளும் அவற்றின் வாரிசுகளும் விலகி வெளிச்சென்று தனிமையில் வீட்டில் தவித்துக் கிடக்கும் ஒரு தாய்ப் பறவையை எப்போதாவது நிறைக்கும் பாதங்கள் அன்பைக் கூட்டி தனிமையை துடைத்து விடுகின்ற போது ஏற்படும் பரவசத்தை இக்கவிதை சிறப்பாக வெளிப்படுத்தி விடுகிறது.

கோடைக்கொதிநிலை நம்மைச் சுற்றியிறுக்கும் பொழுதில் உச்சக் கொதி நிலையில் கொதித்தபடி பற்றி எரியும் காற்றுக்கு மத்தியில் தவிக்கும் உலோகக் கூண்டில் அடைபட்டிருக்கும் மனிதர்களுக்கு இடையிலும் ''அம்மாவைப் பார்த்து அத்தனை அழகாகச் சிரிக்கிறது ஒரு குழந்தை கொன்றை மலரை போல'' என்று எழுதும் கவிஞரின் ரசனையைப் பார்க்கையில் கடுங்கோடையிலும் புயல் மழையிலும் நமக்கான நல்வாய்ப்புகளை ரசிக்க வைக்கின்றன.

"வாகனத்தில் பறக்கையில்
ஒற்றைக் கையால்
கடவுளை வணங்குவது போலல்ல, பேச்சிலும் மூச்சிலும்
வெண் புகை நடனமிடும் மலைப்பிரதேசமொன்றின் பனிக்காலையின் தேநீர்க் கோப்பையைப் போல்
கவிதையைக் கையில் ஏந்துங்கள். வெம்மையையும், ருசியையும்
சிறிது சிறிதாய் அருந்துவதைப் போல்
வரிகளை நிதானமாய் வாசியுங்கள்."

இப்படியாக கவிதைக்கு மட்டுமல்லாத இந்த இலக்கணம் அவரவர் வாழ்க்கைக்கும் பொருந்தும். வாழ்வையும் நின்று நிதானமாக ரசித்துப் பாருங்கள். காணும் இடமெங்கும் பரவசம் நமக்கு மிகச் சிறந்த அனுபவங்களை கொடுக்கும் என்று நம்பிக்கை தருகிறார் கவிஞர்.




திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# "சிலம்பொலி" சு. செல்லப்பன்

கட்டுரை

## வாழ்க்கைக் குறிப்பு



நாமக்கல் மாவட்டத்தில் உள்ள சிவியாம்பாளையம் எனும் ஊரில் பழனியம்மாள் - சுப்பராயன் ஆகியோருக்கு மகனாக 22 டிசம்பர் 1929 அன்று பிறந்தார்

## பணிகளும் பொறுப்பும்:

கணித ஆசிரியர், மாவட்டக் கல்வி அலுவலர், இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு (1968) உதவி அலுவலர், தமிழ் வளர்ச்சி இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர்,
தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தரைப் பரிந்துரைக்கும் குழுவின் தலைவர் 1999

## எழுதிய நூல்கள்

- சிலம்பொலி (1975)
- சங்க இலக்கியத் தேன் (மூன்று தொகுதிகள், 1996)
- நல்ல குறுந்தொகையில் நானிலம், 1959
- மூன்றும் நான்கும் (திரிகடுகம் , நாண்மணிக்கடிகை தெளிவுரை), 1980
- இளங்கோ அடிகள் அருளிய சிலப்பதிகாரம் (மூலமும் தெளிவுரையும்), 1994
- மணிமேகலை (மூலமும் தெளிவுரையும்), 1998
- நாலடியார் (மூலமும் தெளிவுரையும்), 2000
- மலர் நீட்டம் (திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள்), 2003
- சிலப்பதிகாரச் சிந்தனைகள், 2011
- கணிதச் செல்வம் (எட்டு நூல்கள்), 1964-1966
- பாரதிதாசன் ஒர் உலகக் கவிஞர், 1983
- வளரும் தமிழ், 1987
- காப்பியக் கம்பரும் புரட்சிக் கவிஞரும், 1989
- நெஞ்சை அள்ளும் சீறா (நான்கு தொகுதிகள்), 2004
- இலக்கியச் சிந்தனைகள், 2004
- பெருங்கதை ஆராய்ச்சி, 2006

திரு அ. வில்சன், இதழாசிரியர்

### எழுதிய நூல்கள்

- இசுலாமிய இலக்கியச் சாரல், 2011
- நான் ஒரு தும்பி, 2004
- திருக்குறள் இன்பத்துப்பால் (மூலமும் உரையும்), 2015
- பெருங்குணத்துக் கண்ணகி, 2008
- செம்மொழித்தமிழ் அகப்பொருள் களஞ்சியம்:14 தொகுதிகள், 2016
- சிலம்பொலியார் பார்வையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர், 2008

### பட்டங்களும் விருதுகளும்

- சிலம்பொலி பட்டம் (1954 இல் இரா. பி. சேதுப்பிள்ளை வழங்கியது)
- பாவேந்தர் பாரதிதாசன் விருது
- சிலம்பொலியாரின் அணிந்துரைகள் எனும் நூல் தமிழ் வளர்ச்சித் துறையின் 2006 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல்களில் திறனாய்வு எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.
- கம்பன் புகழ் விருது, 2013 வழங்கியது: கொழும்புக் கம்பன் கழகம், இலங்கை

### தொடர் சொற்பொழிவுகள்

செல்லப்பனின் முக்கியமான பங்களிப்பு பட்டிதொட்டியெங்கும் பழந்தமிழ் இலக்கியத்தைத் தன்னுடைய உரைகளின் வழி தூக்கிச் சுமந்தவர் என்பதாகும். பழந்தமிழ் இலக்கியத்தின் மீது காதல் உண்டாகிவிடும்படி விளக்கங்களோடும் சுவாரஸ்யமான உதாரணங்களோடும் பேசுவார். சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், சீறாப்புராணம், தேம்பாவணி, வைணவத் தமிழ், பாவேந்தரின் பாடல்கள், காவியங்கள், நாடகங்கள், ராவண காவியம் எனத் தமிழ் இலக்கியங்களை ஆண்டுக்கணக்கில் தொடர் உரையாற்றி மங்காப் புகழ்பெற்றவர்.

### மறைவு

06 ஏப்ரல் 2019 அன்று இந்த மண்ணுலகை விட்டு மறைந்தார்

**நன்றி**
https://ta.wikipedia.org/wiki/
https://www.hindutamil.in/

திரு அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

மகத்தான சாதனை

புரிந்தவர்கள் யாவரும

தோல்வி பல கடந்து

வென்றவர்களே

அகமும் தமிழே

முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa
www.aagaramuthala.com
aagaramuthala@gmail.com